




admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்









| Vol: 03 | Issue: 123 | 4 Pages | 2.12.2025 | Tuesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 123 | 4 பக்கங்கள் | 2.12.2025 | செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தின்**
**அல்லற் படுப்பதூஉ மில்**

**விளக்கம்:**
**நல்ல இனத்தைவிடச் சிறந்ததாகிய துணையும் உலகத்தில் இல்லை, தீய இனத்தைவிடத் துன்பப்படுத்தும் பகையும் இல்லை.**

## ரஷியாஉக்ரைன் போரை நிறுத்தும் முயற்சியில் முன்னேற்றம்: அமெரிக்கா தகவல்



வாஷிங்டன், டிச.1

ரஷியா–உக்ரைன் இடையேயான போர் 3 ஆண்டுகளை கடந்துவிட்டது. போரை நிறுத்த அமெரிக்கா அதிபர் டிரம்ப் தீவிர முயற்சி செய்து வருகிறார். ரஷியா–உக்ரைன் இடையேயான போரை முடிவுக்கு கொண்டு வர 28 அம்சங்களைக் கொண்ட அமைதித் திட்டத்தை டிரம்ப் பரிந்துரைத்தார். டிரம்ப் பரிந்துரைகள் ரஷ்யாவுக்கு சாதகமாகவும், உக்ரைனுக்கு பாதகமாகவும் இருப்பதாக உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி அதிருப்தி தெரிவித்திருந்தார். அவரை சமாதானப்படுத்தும் முயற்சியில் அமெரிக்கா தீவிரம் காட்டி வருகிறது.

இந்தநிலையில், அமெரிக்க வெளியுறவுத்துறை மந்திரி மார்கோ ரூபியோ, உக்ரைன் தேசிய பாதுகாப்பு கவுன்சில் செயலாளர் ருஸ்டெம் உமெரோவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். பின்னர் அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது: "ரஷியா–உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஒப்பந்தம் தொடர்பாக உக்ரைனுடனான பேச்சுவார்த்தைகள் பயனுள்ளதாக இருந்தன. இது சண்டையை முடிவுக்குக் கொண்டுவரும் விதிமுறைகள் மட்டுமல்ல; இது உக்ரைனின் நீண்டகால செழிப்புக்கான விதிமுறைகளைப் பற்றியது. இன்று நாம் அதைக் கட்டியெழுப்பினோம் என்று நினைக்கிறேன். ஆனால் இன்னும் நிறைய வேலை செய்ய வேண்டியிருக்கிறது" என்று அவர் கூறினார்.

## வெள்ள பாதிப்பு: நிவாரணப்பொருட்களுடன் இலங்கைக்கு சென்றது ஐ.என்.எஸ் சுகன்யா கப்பல்



இலங்கை, டிச.2


இலங்கையில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. 'தித்வா' புயல் காரணமாகவும் கனமழை கொட்டித்தீர்த்தது. இதனால் ஆறுகள் கரைபுரண்டு ஓடுவதால் அங்குள்ள பல நகரங்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன. இந்த வெள்ளப்பெருக்கில் ஏராளமானோர் அடித்து செல்லப்பட்டனர். இதனை தொடர்ந்து பல இடங்களில் நிலச்சரிவும் ஏற்பட்டது. இந்த நிலச்சரிவில் சிக்கி ஏராளமானோர் உயிருடன் புதையுண்டனர். எனவே வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவில் சிக்கியவர்களை தேடும் பணி முடுக்கிவிடப்பட்டது.

இதில் பலர் பிணமாக கண்டெடுக்கப்பட்டதால் பலி எண்ணிக்கை தற்போது 330 ஆக உயர்ந்துள்ளது. 200க்கும் மேற்பட்டோர் மாயமாகி இருப்பதால் அவர்களை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. முன்னதாக வெள்ளம் அதிகம் பாதிக்கப்பட்ட பகுதியில் இருந்து சுமார் 1½ லட்சம் பேர் தற்காலிக நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டு உள்ளனர்.

எனவே வெள்ளப்பெருக்கால் ஏற்பட்ட பாதிப்பை சமாளிக்க நாடு முழுவதும் அவசர நிலை பிறப்பித்து அதிபர் அநுர குமார திசநாயக உத்தரவிட்டுள்ளார். இதனால் வெள்ள மீட்பு பணியில் பேரிடர் மீட்பு படையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இதற்கிடையே வெள்ள மீட்பு பணிக்கு உதவ இலங்கைக்கு இந்தியாவும் ஆதரவுக்கரம் நீட்டியது. அதன்படி இலங்கைக்கு உணவு, மருந்து, போர்வை போன்ற அத்தியாவசிய பொருட்கள் விமானம் மூலம் அனுப்பிவைக்கப்பட்டு உள்ளன.

'ஆப்பரேஷன் சாகர் பந்து' திட்டத்தின் வாயிலாக, விமானப் படைக்கு சொந்தமான இரு விமானங்களில் தேசிய பேரிடர் மீட்புக் குழுவினர் 80 பேர் மற்றும் 21 டன் அத்தியாவசியப் பொருட்கள் இலங்கைக்கு இந்தியா அனுப்பியது. மேலும் ஒரு விமானத்தில் மருந்துகள், மருத்துவ உபகரணங்கள் உள்ளிட்ட நிவாரணப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டன. தற்போது நிவாரணப்பொருட்களுடன் இந்திய கடற்கடை கப்பல் ஐ.என்.எஸ்., சுகன்யா, திரிகோணமலை துறைமுகத்துக்கு சென்றுள்ளது. இது தவிர, கடற்படைக்கு சொந்தமான ஐ.என்.எஸ்., விக்ராந்த் கப்பலில் இருந்து இரு ஹெலிகாப்டர்கள், அங்கு மீட்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

## சாரா மறைவுக்கு ஜோ பைடன் நிர்வாகமே பொறுப்பு; அமெரிக்க அரசு குற்றச்சாட்டு



வாஷிங்டன் டி.சி., டிச.2

அமெரிக்காவின் வெள்ளை மாளிகையில் சமீபத்தில் நடந்த துப்பாக்கி சூடு சம்பவத்தில் தேசிய பாதுகாப்பு படையை சேர்ந்த 2 பேர் படுகாயமடைந்தனர். அவர்களில் சாரா பெக்ஸ்டிராம் (வயது 20) என்பவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்து விட்டார். மற்றொருவரான ஆண்ட்ரூ உல்ப் (வயது 24) தீவிர காயத்துடன் உயிருக்கு போராடி வருகிறார். இந்த தாக்குதலை நடத்தியவர் ரகுமானுல்லா லக்கன்வால் (வயது 29) என சந்தேகிக்கப்படுகிறது. இந்நிலையில், அமெரிக்காவின் டிரம்ப் தலைமையிலான அரசு நடந்து வருகிறது. டிரம்ப் அரசின் உள்நாட்டு பாதுகாப்புக்கான உயரதிகாரியான கிறிஸ்டி நோயம், வெள்ளை மாளிகையில் நடந்த தாக்குதலில், சாரா கொல்லப்பட்டதற்கு ஜோ பைடன் அரசே பொறுப்பு என குற்றச்சாட்டாக கூறியுள்ளார்.

துப்பாக்கி சூடும், அதில் சாரா பலியானதற்கும் முழு பொறுப்பும் பைடனும், அவருடைய நிர்வாகமுமே காரணம். பைடன் அரசிலேயே இது போன்ற தனி நபர்கள் அமெரிக்காவுக்குள் நுழைவது தொடங்கியது என கூறியுள்ளார்.

ரகுமானுல்லா, ஆப்கானிஸ்தானில் இருந்து 2021ம் ஆண்டு அமெரிக்க படைகள் வாபஸ் பெற்ற பின்னர், ஜோ பைடன் அரசின்போது, அமெரிக்காவுக்கு புலம்பெயர்ந்து சென்றவர். ஆபரேசன் அல்லைஸ் வெல்கம் என்ற பெயரில் நட்பு நாடுகளை சேர்ந்தவர்களை வரவேற்கிறோம் என பைடன் அரசு கூறியது.

# தொழில்துறை எரிசக்தி திறனில் 55.3 சதவீதம் பெற்று உச்சம் தொட்ட தமிழ்நாடு..!






சென்னை, டிச.2

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:

தமிழ்நாடு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் 2021 இல் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் இந்தியாவில் தமிழ்நாடு நம்பர் 1 மாநிலம் எனும் இலக்கை அடைந்திடும் நோக்கில் பல்வேறு திட்டங்களை உருவாக்கி முனைப்புடன் செயல்படுத்தி வருகிறார்கள். அதன் பயனாக தமிழ்நாடு ஒவ்வொரு துறையிலும் அபரிமிதமான வளர்ச்சி கண்டு, இந்தியாவில் முன்னணி மாநிலமாக சிறந்து விளங்குகிறது. இதனை மத்திய அரசினுடைய ஆய்வறிக்கைகள் அவ்வப்பொழுது வெளியிட்டு வருகின்றன. செய்தி ஊடகங்களும், செய்தி ஏடுகளும் கூட இந்த உண்மையை வெளிப்படுத்தி தமிழ்நாட்டையும், தமிழ்நாட்டின் தன்னிகரில்லா முதல்அமைச்சர் .மு.க.ஸ்டாலினையும் பாராட்டி வருகின்றன.

அந்த வகையில், தொழில்துறை எரிசக்தித் திறனில் தமிழ்நாடு இந்தியாவின் நம்பர் 1 மாநிலம் எனத் திகழ்வதாக மாநில எரிசக்தி திறன் குறியீடு (State Energy Efficiency Index SEEI) அமைப்பு தெரிவித்துள்ளது.

தொழில்துறை எரிசக்தி திறனில் தமிழ்நாடு தேசிய அளவில் உச்சம் பெற்று மாநில ஆற்றல் திறன் குறியீடு (SEEI) 2024 இன் குழு 1 இல் 55.3 சதவீத மதிப்பெண்களுடன் முதலிடத்தைப் பிடித்துள்ளது

ஆந்திரப் பிரதேசம் அளவீட்டுக் குறியீடுகளின்படி, நாட்டின் மிக உயர்ந்த முன்னேற்றத்தைப்பதிவு செய்து, 27.5சதவீத முன்னேற்றத்தைப் பதிவு செய்து, இரண்டாம் குழுவில் முன்னிலை வகிக்கிறது. 23.1சதவீதம் வளர்ச்சி பெற்று ஒடிசா , 28.8சதவீதம் வளர்ச்சி பெற்று சத்தீஸ்கர், 16.5சதவீதம் வளர்ச்சி பெற்று மத்தியப்பிரதேசம் 10.9 சதவீதம் வளர்ச்சி பெற்று திரிபுரா உள்ளிட்ட பல மாநிலங்களும் வலுவான முன்னேற்றத்தைப்படைத்துள்ளன.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் தனித்தன்மையுடன் கூடிய முயற்சிகளின் பயனாக குழு 1 இல் உள்ள தமிழ்நாடு, கட்டுமானத் துறையில் ஆற்றல் திறன் முயற்சிகளை ஊக்குவிப்பதிலும், செயல்படுத்துவதிலும் முன்னணி மாநிலமாக உருவெடுத்துள்ளது. மேலும், அதிக எண்ணிக்கையிலான சான்றளிக்கப்பட்ட பசுமை கட்டடங்களைக் கொண்ட முதல் மூன்று மாநிலங்களில் ஒன்றாகவும் திகழ்கிறது.

தமிழ்நாட்டின் (PEACE) திட்டம் வாயிலாக 202324 ஆம் ஆண்டில் விழிப்புணர்வு, பயிற்சி, எரிசக்தி தணிக்கை மானியங்கள் ஆகியவற்றுடன் செயல்படுத்தல் முயற்சிகளுக்காக குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கான ஆற்றல் திறன்களுக்காக மொத்தம் 2.6 கோடி ரூபாய் முதலீடு செய்து ஊக்கப்படுத்தியுள்ளது.

எரிசக்தி பாதுகாப்பு முயற்சிகளை அங்கீகரிக்கும் விதமாக, 25 மாநிலங்கள் எரிசக்தி பாதுகாப்பு விருதுகளைப் பெற்றுள்ளன. விருதுகளின் எண்ணிக்கையில் மராட்டியம், தமிழ்நாடு, ஒடிசா ஆகியவை முன்னணியில் உள்ளன. அடுத்த நிலையில் குஜராத் இடம்பெற்றுள்ளது.

தொழில்துறை எரிசக்தி செயல்திறனில்மிகப்பெரியமுன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ள மாநிலங்கள் வரிசைப்படி:

1 தமிழ்நாடு 55.3 சதவீதம்
2 சத்தீஸ்கர் 29 சதவீதம்
3 ஆந்திரப் பிரதேசம் 26 சதவீதம்
4 ஒடிசா 23 சதவீதம்
5 மத்தியப் பிரதேசம் 17 சதவீதம்
6 திரிபுரா 11 சதவீதம்

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தாராபுரம் அதிமுக தேர்தல் பாக முகவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கும் நிகழ்ச்சி மற்றும் பூத் கமிட்டி மற்றும் பி எல் ஏ டு ஆலோசனைக் கூட்டம்

. கழக பொதுச்செயலாளர் முன்னாள் முதலமைச்சர் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு திரு எடப்பாடி யார் அவர்களின் ஆணைக்கிணங்க கழக தலைமை நிலைய செயலாளர் எதிர்க்கட்சி கொறடா முன்னாள் அமைச்சர் எஸ் பி வேலுமணி MLA அவர்களின் அறிவுறுத்தலின்படி திருப்பூர் புறநகர் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளர் மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு c. மகேந்திரன் அவர்களின் ஆலோசனைப்படி. தாராபுரம் நகர கழக செயலாளர் திரு CR என்கின்ற C. ராஜேந்திரன் BE, தலைமையில் இன்று வேல்முருகன் திருமண மண்டபத்தில் பூத் கமிட்டி மற்றும் BLA 2 முகவர்களுக்கு ஆலோசனைக் கூட்டமும் மற்றும் ஊக்கத் தொகையும் வழங்கப்பட்டது. இந்



நிகழ்வில் மாவட்ட கழக பொருளாளர் திரு சின்னப்பன் என்கின்ற பழனிசாமி மாவட்ட கவுன்சிலர் திருமதி பானுமதி கருணாகரன் மாவட்டஅம்மாபேரவைதுணைச் செயலாளர் திரு கோகுல்ராஜ் குண்டடம் முன்னாள் சேர்மன் திரு குப்புசாமிஓட்டுநர்அணியின்மாவட்ட செயலாளர் திரு பங்க் பி மகேஷ் குமார் மாவட்ட வர்த்தக அணி செயலாளர் திரு கோல்டன்ராஜ் மாவட்ட அம்மா பேரவை பொருளாளர் திரு அரசகுமாரன் மாவட்ட மாணவர் அணி துணை செயலாளர் ஜாகிர் அப்பாஸ் நகர மகளிர் அணி செயலாளர் கௌரிசித்ரா முருகேசன் நகர அம்மா பேரவை செயலாளர் திரு கே என் ராமசாமி நகர இளைஞரணி செயலாளர் திரு தினேஷ் குமார். நகர தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் திரு திலிப் சீனிவாசன் மேலும் அனைத்து கழக செயலாளர் மற்றும் நகர கழக நிர்வாகிகள் சார்பணி மாவட்ட நகர நிர்வாகிகள் கிளைக் கழக வார்டு கழக நிர்வாகிகள் மற்றும் கழக செயலாளர் அனைவரும் கலந்து கொண்டனர்

## ஆண்டிபட்டி கடமலைக்குண்டு கிராமத்தில் அ.தி.மு.க வழக்கறிஞர் பிரிவு மாவட்ட செயலாளர் இல்ல திருமண விழா

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி கடமலைக்குண்டு கிராமத்தில் அ.தி.மு.க வழக்கறிஞர் பிரிவு மாவட்ட செயலாளர் திரு. T.K.R கணேசன் அவர்களின் இல்ல திருமண விழா சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கான வரவேற்பு ஏற்பாடுகள் வெகு விமர்சையாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.. தமிழக பாஜக தலைவர் திரு. நைனார் நாகேந்திரன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். அவரை கடமலைக்குண்டு





மீனாட்சி அம்பிகை சமேத சுந்தரேஸ்வரர் ஆலய சிவன் அண்பர்கள் பூரண கும்ப மரியாதையுடன்வரவேற்றனர். டன் தேனி அதிமுக கிழக்கு மாவட்ட செயலாளர் திரு.முறுக் கோடை M. P.ராமர் அவர்களும் கழகத் தொண்டர்களும் கழக நிர்வாகிகளும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர் .




# தாராபுரம் வந்த பிரேமலதா விஜயகாந்துக்கு தொண்டர்கள் உற்சாக வரவேற்பு



தாராபுரம், டிச.2
திருப்பூர் மாவட்டம் தாராபுரத்துக்கு தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் வருகை தந்தார். தாராபுரம் ஐடிஐ கார்னர் பகுதிக்கு வந்திறங்கிய அவருக்கு, அக்கட்சியின் தெற்கு மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் பன்னீர்செல்வம் தலைமையில் அக்கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். பின்னர் சர்ச் சாலை வழியாக “கேப்டன் விஜயகாந்த்” ரத யாத்திரையை தொடங்கி வைத்து “உள்ளம் தேடி இல்லம் நாடி” நிகழ்ச்சியில் நடைபயணமாக சென்றார். அப்பொழுது தொண்டர்களிடையே பேசிய அவர், 2026 சட்டமன்றத் தேர்தலில் தொண்டர்கள் விரும்பும் கூட்டணி அமையும். மக்கள் தலைவர் விஜயகாந்த் விட்டு சென்ற பணிகளை தொடர்ந்து நிறைவேற்றுவது தொண்டர்களாகிய உங்களின் கடமை. வரவிருக்கும் சட்டமன்ற நாடாளுமன்ற மற்றும் உள்ளாட்சி தேர்தல்களில் தேமுதிகவினர் சட்டமன்ற உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர், நகராட்சி தலைவர், பஞ்சாயத்து தலைவர், வார்டு கவுன்சிலர் ஆகிய பதவிகளில் அமர வேண்டும். அதற்காக நமது கட்சி தொடர்ந்து பாடுபடும். தாராபுரத்தைப் பொறுத்தவரை உப்பாறு அணிக்கு ஆண்டு முழுவதும் தண்ணீர் விடுவதற்கு பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தின் கீழ் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். குளத்துபாளையம் பகுதியில் இயங்கிய கூட்டுறவு நூற்பாலை தற்போது தமிழக அரசால் கையகப்படுத்தப்பட்டு சிப்காட் தொழிற்சாலை அமைக்கப்படும் என கூறப்படுகிறது. சுற்றுச்சூழல் மாசு ஏற்படாத வகையில் எந்த தொழில் நிறுவனம் வர உள்ளது என்பதை தமிழக அரசு மக்களிடம் விளக்க வேண்டும். தாராபுரம் பகுதியில் 50 சதவீதம் நெல் சாகுபடி நடக்கிறது. இங்கே விளையும் நெல் தஞ்சாவூர் உள்ளிட்ட டெல்டா மாவட்டங்களுக்கு விதை நெல்லாக அனுப்பப்படுகிறது. புராண சிறப்புமிக்க தாராபுரம் பகுதியில் அடிப்படை வசதிகளை தமிழக அரசு இன்னும் மேம்படுத்த வேண்டும். மேலும் அங்கு கூடியிருந்த கட்சியினர் பொதுமக்களை பார்த்து, இனி மீண்டும் வந்து உங்களை சந்திப்பேன் என்று கூறி விடை பெற்று சென்றார்.

# தஞ்சையில் ரெயில்வே அதிகாரி இல்ல வரவேற்பு விழா: பாஜக தலைவர் வாழ்த்து



தஞ்சாவூர், டிச.2
தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் நகர் ஓய்வு பெற்ற ரெயில்வே அதிகாரி இளங்கோ புவனேஸ்வரி தம்பதி மகள் மலர்விழிக்கும் தெலுங்கானா மாநிலம் ஜெயராஜூஜானகி தம்பதி மகன் சந்தீப்குமாருக்கும் தெலுங்கானா மாநிலம் பாலவன்சா நகரில் திருமணம் நடந்தது. அதைத் தொடர்ந்து தஞ்சை மருத்துவக்கல்லூரி சாலை கந்தசரஸ் கிராண்ட் மினி ஹாலில் வரவேற்பு நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சியில் தஞ்சை வடக்கு மாவட்ட பாஜக ஆன்மீகம் மற்றும் ஆலய மேம்பாட்டு பிரிவு தலைவர் து.இளங்கோவன் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். அப்போது மணமக்கள் குடும்பத்தினர் உடன் இருந்தனர்.

# அரியலூர் மாவட்ட கலெக்டர் தலைமையில் சிறப்பு தீவிரத் திருத்தம் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடனான ஆலோசனைக் கூட்டம்



அரியலூர், டிச.2
இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, அரியலூர் மாவட்டத்திற்குட்பட்ட இரண்டு சட்டமன்ற தொகுதிகளிலும் வாக்காளர் பட்டியல்களின் சிறப்பு தீவிரத் திருத்தப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதன்படி வாக்குசாவடி நிலை அலுவலர்களால் 04.11.2025 முதல் அரியலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து வாக்காளர்களின் வீடுகளுக்கும் சென்று கணக்கெடுப்பு படிவம் வழங்கப்பட்டு தற்போது பூர்த்தி செய்யப்பட்ட கணக்கெடுப்பு படிவங்கள் மீள பெறப்பட்டு நாளது தேதி வரை 85.81% படிவங்கள் தேர்தல் ஆணையத்தின் பிரத்யேக செயலியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

சிறப்பு தீவிரத் திருத்தம் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளுடன் ஆலோசனை கூட்டம் நடத்தப்பட்டது. மேற்கண்ட ஆலோசனை கூட்டத்தில் சிறப்பு தீவிர திருத்தப்பணியில் அரியலூர் மாவட்டத்தில் உள்ள வாக்காளர்களில் நாளது தேதிவரை 99.31% வாக்

காளர்களுக்கு கணக்கெடுப்பு படிவம் வழங்கப்பட்டுள்ளது. இதில் 85.81% கணக்கெடுப்பு படிவங்கள் மீள பெறப்பட்டு செயலியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. மேலும் வாக்குச்சாவடி முகவர்கள் மூலம் அவரவர்கள் பாகத்திற்குட்பட்ட இறந்து போன வாக்காளர்கள், நிரந்தரமாக இடம் பெயர்ந்த வாக்காளர்கள் குறித்த விபரத்தினை பட்டியலிட்டு வாக்குசாவடி முகவரின் சான்றொப்பமிட்டு வழங்கிடவும் தெரிவிக்கப்பட்டது. கணக்கீட்டு படிவங்களை திருப்பி அளிக்காத வாக்காளரின் பெயர் டிசம்பர் 9 அன்று வெளியிடப்பட உள்ள வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெறாது என்றும், கணக்கீட்டு படிவங்களை சமர்ப்பிக்க கடைசி நாள் வரை (04.12.2025) காத்திருக்காமல் உடனடியாக சமர்ப்பிக்குமாறு வாக்காளர்களுக்கு முகவர்கள் மூலம் தெரிவிக்குமாறும், மேலும் படிவங்களை பூர்த்தி செய்திட மாவட்ட நிர்வாகத்தால், தொடர்புடைய வட்ட அலுவலகங்களில் சிறப்பு உதவி மையம் அமைக்கப்பட்டுள்ளது எனவும், தகுதியுள்ள எந்த ஒரு வாக்காளரும் விடுபடக்கூடாது என்ற நோக்கத்திற்காக மேற்கொள்ளப்படும் இந்த தீவிர திருத்தப்பணிக்கு அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினரும் ஒத்துழைப்பு நல்குமாறும் கோரப்பட்டது என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் பொ.இரத்தினசாமி தெரிவித்துள்ளார்.

# ஓசூர் மாநகராட்சி துவக்கப்பள்ளி பாரதியார் நகர் பள்ளியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா



ஓசூர், டிச.2
கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் ஓசூர் மாநகர மேற்கு பகுதி திமுக மாணவரணி சார்பில் ஓசூர் மாநகராட்சி துவக்கப்பள்ளி பாரதியார் நகர் பள்ளியில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா முன்னிட்டு மேற்கு பகுதி திமுக மாணவரணி சார்பில் கலந்து கொண்ட ஓசூர் மாநகராட்சி துணை மேயர் ஓசூர் மாநகர மேற்கு பகுதி திமுக கழகச் செயலாளர் சி.ஆனந்தய்யா பள்ளி மாணவ, மாணவிகளுக்கு இனிப்புகள் வழங்கியபோது உடன் மேற்குப் பகுதி திமுக மாணவரணி அமைப்பாளர் அருண் வேடியப்பன், ஒன்பதாவது வட்ட அவைத்தலைவர் சுப்பிரமணி, வட்ட செயலாளர் கார்த்திக், மற்றும் சூர்யா இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் வார்டு கழக நிர்வாகிகள் மற்றும் ஆசிரியர்கள் உள்ளனர்.

# கரூர் அருகே பொய்யாமணி, தண்ணீர் பள்ளியில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் கொண்டாட்டம்



கரூர் டிச.2
கரூர் மாவட்டம் பொய்யாமணி மற்றும் தண்ணீர் பள்ளியில் குளித்தலை மேற்கு ஒன்றிய திமுக சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினின் 49 வது பிறந்த நாள் விழா கொண்டாட்டம் ஒன்றிய செயலாளர் பொய்யாமணி தியாகராஜன் தலைமையில் நடைபெற்றது. பொய்யாமணியில் திமுக மாவட்ட அவைத்தலைவர் ராஜேந்திரன் கழக கொடியினை ஏற்றி வைத்து பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினார். அதனைத் தொடர்ந்து பொய்யாமணியில் சுமார் 200 பேருக்கு ஒன்றிய செயலாளர் தியாகராஜன் அன்னதானம் ஆகினார் அதனைத் தொடர்ந்து பொய்யாமணி மற்றும் தண்ணீர் பள்ளி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளில் பள்ளி மாணவ மாணவிகளுக்கு நோட்டு புத்தகங்களையும் வழங்கினார். அதனைத் தொடர்ந்து தண்ணீர்பள்ளிசாந்திவனம் ஆசிரமத்தில் உள்ள முதியவர்களுக்கு மதிய உணவினையும் வழங்கினார். முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் தேன்மொழி, ஒன்றிய அவைத் தலைவர் நெடுஞ்செழியன், ஜெகன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் பலரும் உடன் இருந்தனர்.

# ஈரோடு வீரப்பன் சத்திரம் பகுதியில் உள்ள ஸ்ரீ கற்பக விநாயகர் திருக்கோயில் கோவில் கும்பாபிஷேக விழா



ஈரோடு, டிச.2
ஈரோடு மாநகராட்சிக்கு உட்பட்ட 23 வது வார்டுக்கு சேர்ந்த முல்லைவீதியில் மிகவும் பழமை வாய்ந்த ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் இருந்தது தற்போது இதனை புதுப்பித்து திருக்குட முழுக்கு நன்னீராட்டுபெருவிழா நிகழ்ச்சி துவங்கியது இதில் இந்த கோயிலில் மூலவராக அருள்மிகு ஸ்ரீ கற்பக விநாயகர், மற்றும் துர்க்கை அம்மன் ஸ்ரீ தட்சிணாமூர்த்தி ஸ்ரீ மகாவிஷ்ணு ஆகிய அமைக்கப்பட்டு இதன் திருக்குடமுழுக்கு நன்னீராட்டு நிகழ்ச்சி தொடங்கப்பட்டது இதில் தொடக்க நிகழ்ச்சியாக கணபதி ஹோமத்துடன் கடந்த கார்த்திகை மாதம் 12ஆம் தேதி துவக்கப்பட்டது தொடர்ந்து காலை மாலையும் யாக பூஜைகளும் தீப ஆராதனைநடைபெற்றது தொடர்ந்து இரண்டு நாட்களாக மங்கல இசை உடன் திருமுறை பாராயணம் உடன் மற்றும் கற்பக விநாயகர் இரண்டாம் பால மஹா பூர்ணாகுதி தீபாராதனை, மற்றும் கலசம் வைத்தல் கண் திறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. மூன்றாம் நாளான முக்கிய நிகழ்வான குடமுழுக்கு நிகழ்ச்சி தொடக்க மாகவிக்னேஸ்வரர் பூஜை நான்காம் கால யாக வழிபாடு ஸ்ரீ கற்பக விநாயகர் பரிவார மூர்த்தி அவர்களுக்கு மகா கும்பாபிஷேக சிறப்பு மஹா அலங்காரத்துடன் தீபாராதனை நடைபெற்றது . இதில் பாண்டியன் வீதி முல்லை வீதி, குழந்தையம்மாள் வீதி, காவேரி ரோடு உட்பட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் பங்கேற்றனர்.

# சென்னையில் இன்று 726 செல்லப் பிராணிகளுக்கு வெறிநாய்க்கடி நோய்த் தடுப்பூசி செலுத்தி, உரிமம் வழங்கப்பட்டது

சென்னை, டிசா2
சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது: பெருநகர சென்னை மாநகராட்சியில் செல்லப்பிராணிகள் வளர்ப்பினை முறைப்படுத்த கடந்த 2023 ஆகஸ்ட் மாதம் முதல் பெருநகர சென்னை மாநகராட்சி இணையதளம் வாயிலாக செல்லப்பிராணி உரிமம் பெறும் முறை நடைமுறையில் உள்ளது. இந்நிலையில் செல்லப்பிராணிக்களுக்கான உரிமம் பெறும் நடைமுறையை மேலும் விரைவுபடுத்தவும், இதன் மூலம் செல்லப்பிராணிகளின் உரிமையாளர்கள் எளிதாக தங்கள் செல்லப்பிராணிகளுக்கான உரிமத்தை பெற்றுக் கொள்வதற்காகவும் மேம்படுத்தப்பட்ட இணையதள சேவை (ஆன்லைன் போர்டல்) மேயரால் 03.10.2025 அன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சி இணையதளம் வாயிலாக செல்லப் பிராணிகளுக்கு உரிமம் பதிவு செய்யும் உரிமையாளர்களுக்கு செல்லப் பிராணிகளுக்கான உரிமை பதிவு செய்தல், வெறி நாய்க்கடி நோய் தடுப்பூசி நாய்களுக்கு செலுத்துதல் மற்றும் மைக்ரோப்சிப்பிங் பொருத்துதல் போன்ற பணிகள் நடைபெற்று வருகிறது. அவ்வாறாக திரு.வி.க. நகர், புளியந்தோப்பு, லாயிட்ஸ் காலனி, நுங்கம்பாக்கம், கண்ணம்மாபேட்டை, மீனம்பாக்கம் ஆகிய செல்லப் பிராணிகள் சிகிச்சை மையங்களிலும், சோழிங்கநல்லூர் நாய் இனக்கட்டுபாட்டு மையத்திலும், என மொத்தம் 7 மையங்களில் 726 செல்லப் பிராணிகளுக்கு வெறிநாய்க்கடி நோய்த் தடுப்பூசி செலுத்தி, மைக்ரோ சிப் பொருத்தி செல்லப்பிராணிகளின் உரிமையாளர்களுக்கு உரிமம் வழங்கப்பட்டது. இதுநாள்வரை 89,691 செல்லப்பிராணிகள் விவரங்கள் பதிவு செய்யப்பட்டு, 43,644 செல்லப் பிராணிகளுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விஸ்வகர்மா புரட்சிக் கழகம் சார்பில் வருகின்ற சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு ஆலோசனை கூட்டம்



மயிலாடுதுறை, டிச.2
மயிலாடுதுறை மாவட்டம் பெரிய கண்ணாரத் தெருவில் அமைந்துள்ள தனியார் திருமண மண்டபத்தில் குப்புசாமி ஆசாரி முத்துசாமி ஆசாரி, தியாக ராஜ பாகவதர் பேரவை மற்றும் விஸ்வகர்மா புரட்சி கழகம் சார்பில் வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலை முன்னிட்டும் விஸ்வகர்மா புரட்சி கழகம் கட்சியாக பதிவு செய்யப்பட்டு 3 மாதங்கள் நிறைவு பெற்றதால் அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பது முன்னிட்டு மாநில, மாவட்ட தேர்தல் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாநிலத தலைவர் சி. மனோ, மாநில செயலாளர் டி. சக்திவேல், கரூர் மாவட்ட மாநில துணை செயலாளர் ஜே. கார்த்திகேயன், மயிலாடுதுறை மாவட்ட செயலாளர் என். கே. மனோகரன், மயிலாடுதுறை பேரவை மாவட்ட செயலாளர் ரயோ.சிவா ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகள், நிவாரண மையங்கள் ஆய்வு



நாகப்பட்டினம் , டிச.2
நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டிட்வா புயல் காரணமாக ஏற்பட்ட மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகள் மற்றும் நிவாரண மையங்களை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக மேலாண்மை இயக்குநர் ஆ.அண்ணாதுரை, ஆய்வு மேற்கொண்டனர். நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட நாகூர் பங்களாத்தோட்டம், அம்பேத்கர்நகர் தெற்கு, கீரைக்கொல்லைத்தெரு, அக்கரைக்குளம் ஆகிய பகுதிகளில் டிட்வா புயல் காரணமாக ஏற்பட்ட மழையால் மழைநீர் தேங்கியுள்ள பகுதியில் நீர் மோட்டார் மூலம் மழைநீர் வெளியேற்றும் பணிகளையும், நாகப்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட சூர்யாநகர் பகுதியைச் சேர்ந்த கிராம மக்கள் காடம்பாடி நகராட்சி நடுநிலைப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாமில் தங்க வைக்கப்பட்டு, உணவுகள் வழங்கப்பட்டு வருகிறது. அவர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளனவா என மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக மேலாண்மை இயக்குநர் ஆ.அண்ணாதுரை, ஆய்வு மேற்கொண்டார். மேலும் நாகப்பட்டினம் மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கக்கூடிய பகுதிகளாக கண்டறியப்பட்டு இப்பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களை தங்கவைப்பதற்கு 11 புயல் பாதுகாப்பு மையங்களும், 6 பல்நோக்கு மையங்களும், 340 அரசு பள்ளி, கல்லூரி கட்டிடங்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. தற்போது தற்காலிகமாக 10 நிவாரண முகாம்களில் 1129 நபர்கள் தங்கவைக்கப்பட்டு அவர்களுக்கு தேவையான உணவு, குடிநீர் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன என மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக மேலாண்மை இயக்குநர் தெரிவித்தார். இந்த ஆய்வில் நாகப்பட்டினம் நகராட்சி ஆணையர்டி.லீனாசைமன் மற்றும் அனைத்து துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# நன்னிலம் பேரூராட்சியில் புயலால் மரம் விழுந்ததை அகற்றும் பணிகள்: கலெக்டர் நேரில் ஆய்வு



மயிலாடுதுறை, டிச.2
மயிலாடுதுறை மாவட்டம் பெரிய கண்ணாரத் தெருவில் அமைந்துள்ள தனியார் திருமண மண்டபத்தில் குப்புசாமி ஆசாரி முத்துசாமி ஆசாரி, தியாக ராஜ பாகவதர் பேரவை மற்றும் விஸ்வகர்மா புரட்சி கழகம் சார்பில் வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலை முன்னிட்டும் விஸ்வகர்மா புரட்சி கழகம் கட்சியாக பதிவு செய்யப்பட்டு 3 மாதங்கள் நிறைவு பெற்றதால் அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்பது முன்னிட்டு மாநில, மாவட்ட தேர்தல் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாநிலத தலைவர் சி. மனோ, மாநில செயலாளர் டி. சக்திவேல், கரூர் மாவட்ட மாநில துணை செயலாளர் ஜே. கார்த்திகேயன், மயிலாடுதுறை மாவட்ட செயலாளர் என். கே. மனோகரன், மயிலாடுதுறை பேரவை மாவட்ட செயலாளர் ரயோ.சிவா ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# வாக்காளர் கணக்கீட்டு படிவங்களை பெற வருபவர்களிடம் மக்கள் முழு ஒத்துழைப்பு வழங்க கலெக்டர் வேண்டுகோள்



கன்னியாகுமர், டிச.2

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் சட்டமன்ற தொகுதி, மாநகராட்சிக்குட்பட்ட தெ.தி இந்துகல்லூரி வாக்குச்சாவடி உதவி மையத்தினை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் ஆர்.அழகுமீனா, நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்

கன்னியாகுமரி மாவட்டத்தில், இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026 ஆனது 01.01.2026ஐ தகுதி நாளாக கொண்டு நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் நமது கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட 6 சட்டமன்ற தொகுதிகளில் மொத்தம் 15,92,872 வாக்காளர்கள் உள்ளார்கள். ஒவ்வொரு சட்டமன்ற தொகுதி வாக்காளர்களின் வீடுகளுக்கு வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடு தோறும் சென்று கணக்கீட்டு படிவம் விநியோகம் செய்யும் பணி 04.11.2025 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டு, பூர்த்தி செய்து திரும்ப பெறப்பட்ட கணக்கீட்டு படிவங்களில் மாலை 4 மணி வரை 13,83,803 கணக்கீட்டு படிவங்கள் மின்னனுமயமாக்கப்பட்டுள்ளது. மேலும் வாக்காளர்களிடமிருந்து திரும்ப பெறப்பட்ட கணக்கீட்டு படிவங்கள் மின்னணுமயமாக்கும் பணிகள் தொடர்ந்து துரிதமாக நடைபெற்று வருகிறது.

இதுவரை திரும்ப கிடைக்க பெறதா கணக்கீட்டு படிவங்களை திரும்ப பெறுவதற்கு நாகர்கோவில் சட்டமன்ற தொகுதி மாநகராட்சிக்குட்பட்ட வாக்காளர்களின் வீடுகளுக்கு வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் இதுவரை மூன்றுக்கும் மேற்பட்ட முறை வந்துள்ளார்கள்.

எனவே வாக்காளர்கள் தாங்கள் பூர்த்தி செய்த தங்களது கணக்கீட்டு படிவங்களை இறுதிவாய்ப்பாக உங்களை நாடி வரும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் திரும்ப ஒப்படைக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நாகர்கோவில் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்காளர்கள் பூர்த்தி செய்த தங்களது கணக்கீட்டு படிவங்களை நீங்கள் நாகர்கோவில் சட்டமன்ற தொகுதி வாக்காளர் பதிவு அலுவலர் மற்றும் நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடம் திரும்ப ஒப்படைக்க வேண்டும். இந்த கணக்கீட்டு படிவங்களை பூர்த்தி செய்து வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் திரும்ப ஒப்படைக்காத வாக்காளர்களின் பெயரானது வரைவு வாக்காளர் பட்டியலில் இடம்பெறாது என்பதையும், இந்த படிவங்களை பூர்த்தி செய்வதற்கான காலக்கெடுவானது நீட்டிக்கப்பட மாட்டாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் ஆர்.அழகுமீனா, தெரிவித்தார்கள்.



திண்டுக்கல் மாநகராட்சி பகுதியில் வாக்காளர்களுக்கு வழங்கப்பட்ட கணக்கெடுப்பு படிவங்களை வாக்காளர்களிடமிருந்து பூர்த்தி செய்து மீள பெறப்படும் பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் செ.சரவணன், பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# இரட்டைக்குளம் ஊத்துமலை கால்வாய் திட்டம் காங்கிரஸ் பாஜக ஒருசேர கோரிக்கையை நிறைவேற்ற வலியுறுத்தல்





தென்காசி டிச2

தென்காசி மாவட்டம் வீரகேரளம்புதூர் தாலுக்கா சுரண்டையில் அமைந்துள்ள இரட்டை குளம் ஊத்துமலை கால்வாய் இணைப்பு திட்டத்திற்கு பல்வேறு தரப்பிலிருந்து கோரிக்கைகள் வலுப்பெற்று வரும் நிலையில் சமீபத்தில் தென்காசி சட்டமன்ற உறுப்பினரும் காங்கிரஸ் கட்சியின் தென்காசி மாவட்ட தலைவருமான பழனி நாடார் இதுகுறித்து செய்தியாளர்களை சந்தித்து பரபரப்பான பேட்டி ஒன்றை அளித்தார் அதில் எங்கு சென்றாலும் மக்கள் இரட்டைக் குளம் திட்டம் என்ன ஆச்சு

என்னாச்சு என கேட்பதாலும் கட்சி நிகழ்ச்சிகள் அரசு நிகழ்ச்சிகள் என எங்கு சென்றாலும் மக்கள் தொடர்ந்து கேள்வி எழுப்புகின்றனர் இது குறித்து பலமுறை சட்டசபையில் பேசியும் முதல்வரிடத்தில் மனுக்கள் அளித்தும் ஒவ்வொரு தொகுதியிலும் முதல் 10 கோரிக்கைகள் அவசர தேவை என்ன என முதல்வர் கேட்ட கடிதத்திலும் முதல் கோரிக்கையாக இரட்டை குளம் இணைப்பு திட்டத்தை நிறைவேற்றி தருமாறு முதல்வருக்கு தெரிவித்தேன் எனது தேர்தல் வாக்குறுதியிலும் தெரிவித்துள்ளேன் ஆனால் தமிழக அரசு நிறைவேற்ற எப்போது முன்வரும் என தெரியவில்லை என திமுக காங்கிரஸ் கூட்டணியில் இருக்கும் சட்டமன்ற உறுப்பினரே பேட்டி அளித்தது பெரும் சலசலப்பை ஏற்படுத்தியது

இந்த நிலையில் தமிழக பாஜகவின் கூட்டுறவு பிரிவு மாநிலச் செயலாளராக இருக்கும் மருதுபாண்டியன் என்பவர் தமிழக நீர்வளத் துறைக்கு கடிதம் ஒன்றை அனுப்பி இருந்தார் அந்த கடிதத்திற்கு தற்போது தமிழக நீர்வளத்துறை அளித்துள்ள பதிலில் இரட்டைக் குளத்தில் இருந்து ஊத்துமலை வரை புதிய கால்வாய் அமைக்கும் திட்டத்திற்கு 72 கோடி திருத்த திட்ட மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது எனவும் அது தமிழக நீர் வள துறையின் தலைமை பொறியாளர் மூலம் தற்போது தமிழக அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தற்போது பதில் வந்துள்ளது இந்த நிலையில் இரட்டைக் குளம் கால்வாய் திட்டம் தென்காசி மாவட்ட மக்களிடையே பெரும் பேசு பொருளாக மாறி உள்ளது

இந்தத் திட்டத்தில் சுமார் 8 கிலோ மீட்டர் தூரம் வாய்க்கால் அமைக்க வேண்டி உள்ளது அதேபோல் சுமார் 68 ஏக்கர் பட்டா நிலமும் சுமார் 7 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலமும் கையகப்படுத்த வேண்டிய சூழல் உள்ளது இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் குறிச்சான்பட்டி வாடியூர் அச்சங்குட்டம் என சுமார் 13 குளங்களும் 10க்கும் மேற்பட்ட கிராம மக்களும் பயன்பெறுவார்கள் அதே போல் 132 ஹெக்டேர் பாசன நிலங்கள் நேரடியாகவும் 163 ஹெக்டேர் நிலங்கள் நிலத்தடி நீர்மட்டம் கிணற்றின் நீர்மட்டம் உயர்தல் போன்றவற்றின் மூலமும் பயன்பெறும் என அப்பகுதி பொதுமக்கள் தெரிவிக்கின்றன.

# வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள்: கலெக்டர் ஆய்வு

இராமநாதபுரம், டிச.2

இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட கலெக்டர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் தொடர்பாக அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட கலெக்டர் அலுவலர்களிடம் தெரிவிக்கையில்,

இந்திய தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதல்களை பின்பற்றி வாக்காளர்கள் சிறப்பு தீவிர திருத்தம் பணிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள படிவங்களை உரிய காலத்திற்குள் பெற்று பதிவேற்றம் செய்திட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து ளுஐசு பணியில் 100மூ குறியீட்டை எய்திய வாக்குச்சாவடி நிலை அலுவலர் திரு.ஜான் மில்டன் அவர்களையும், சிறப்பாக பணியாற்றிய வருவாய் ஆய்வாளர் ஃ மேற்பார்வையாளர் கார்த்திகா அவர்களையும் பாராட்டி வாழ்த்துகளை தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது மாவட்ட வருவாய் அலுவலர் வ.சங்கரநாராயணன், முதுகுளத்தூர் வட்டாட்சியர் கோகுல்நாத் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

# எஸ்.புதூர் கிராமத்தில் கட்டப்படவுள்ள புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டட பணிகள்: அமைச்சர் அடிக்கல் நாட்டினார்



சிவகங்கை, டிச.2

கூட்டுறவுத்துறை அமைச்சர்.கேஆர்.பெரியகருப்பன் எஸ்.புதூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட எஸ்.புதூர் கிராம பகுதியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் 15வது நிதிக்குழு மானியம் (சுகாதாரம் நிதி) திட்டம் 2025-2026 ன் கீழ் கட்டப்படவுள்ள புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டட பணிக்கு மாவட்ட கலெக்டர் கா.பொற்கொடி, தலைமையில் அடிக்கல் நாட்டி, கட்டுமானப் பணியை துவக்கி வைத்து தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களுக்கு பயனுள்ள வகையில், எண்ணற்ற திட்டங்களை தமிழகத்தில் செயல்படுத்தி பிற மாநிலங்களுக்கு முன்மாதிரியான முதலமைச்சராகவும், முதன்மையான முதலமைச்சராகவும் திகழ்ந்து வருகிறார்கள்.

அந்த வகையில், கல்வி மற்றும் மருத்துவத்தினை தனது இரு கண்களாக கொண்டு, அதில் கூடுதல் கவனம் செலுத்தி, அதற்கென அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்தும் சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

அதில், பொதுமக்களின் உடல் நலத்தினை பேணிக்காக்கின்ற பொருட்டு, மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48 மற்றும் நலம் காக்கும் ஸ்டாலின் ஆகிய திட்டங்கள் பொது மக்களுக்கு பயனுள்ள வகையில் தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், பொதுமக்களுக்கு பயனுள்ள வகையில் தாங்கள் வசிக்கும் பகுதிக்கு அருகாமையிலேயே மருத்துவ முகாம்களும் அவ்வப்போது நடத்தப்பட்டு வருகிறது. அரசு மருத்துவமனை மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் தேவையான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு, தேவையான அனைத்து மருத்துவ உபகரணங்களும் வழங்கப்பட்டு வருகிறது.

அந்தவகையில், எஸ்.புதூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட எஸ்.புதூர் கிராம பகுதி பொதுமக்கள் தரமான மருத்துவசேவையினை எளிதில் பெறவேண்டும் என்ற நோக்கில், இன்றையதினம் (29.11.2025) ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் 15 வது நிதிக்குழு மானியம் (சுகாதார நிதி) திட்டம் 2025 26ன் கீழ் ரூபாய் 147.34 இலட்சம் மதிப்பீட்டில் புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டட பணிக்கு அடிக்கல் நாட்டி, கட்டுமானப் பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. கடந்த 1958ல் அண.அ.அண்ணாமலைக் கோனார் அவர்களால் நன்கொடையாக இப்பகுதி மக்களுக்கு பயனுள்ள வகையில் மருத்துவ கட்டடத்துடன் தானமாக வழங்கப்பட்டுள்ள இவ்விடத்தில் முன்னதாக பொறுத்தப்பட்ட கல்வெட்டினையும், புதிதாக அமையவுள்ள புதிய கட்டிடத்திலும் இடம்பெற செய்ய வேண்டும் என இத்தருணத்தில் அன்புடன் தெரிவித்துக்கொண்டு, அவர்களின் வகையராகளுக்கு இத்தருணத்தில் நன்றியினையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இவ்வாறாக கட்டப்படும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் நவீன முறையில் ஏற்படுத்தப்பட்டு, தரமான மருத்துவசேவைகள் வழங்கிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதுபோன்று, உயிர் காக்கும் மருத்துவ சேவையினை பொதுமக்களுக்கு வழங்குவதற்கென, பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு முன்பாகவே அதற்கான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, பொதுமக்களின் நலன் காக்கப்பட்டு வருகிறது. இதனை பொதுமக்கள் கருத்தில் கொண்டு தரமான மருத்துவ சேவையினை பெற்று பயன்பெற வேண்டும் என கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் தெரிவித்தார்.

# இராஜபாளையம் மற்றும் விருதுநகர் பகுதிகளில் வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிரத் திருத்த முகாம் பணிகள்: கலெக்டர் நேரில் ஆய்வு



விருதுநகர், டிச.2

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் திருவனந்தபுரம் தெரு மற்றும் விருதுநகர் முத்தால் நகர் கூரைக்குண்டு தொடக்கப்பள்ளியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப் பணிகள் தொடர்பாக, வெளியூரில் பணிபுரிபவர்கள் தங்களுக்கான படிவங்களைப் பெற்றுக் கொள்வதை எளிதாக்குவதற்காகவும், 2002ம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் தங்களது பெயர்களைக் கண்டறிவதற்கு உதவி செய்வதற்காகவும், படிவங்களை நிரப்புவதற்கும், நிரப்பப்பட்ட படிவங்களை வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் திரும்ப அளிப்பதற்காவும், அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் சிறப்பு முகாம்கள் நடைபெற்று வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட கலெக்டர் என்.ஓ.சுகபுத்ரா, நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

01.01.2026 தேதியை தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு வாக்காளர் பட்டியல்களை திருத்தம் செய்வதற்கான சிறப்புத் தீவிரத் திருத்தப் பணிகள் விருதுநகர் மாவட்டத்தில் நடைபெற்று வருகிறது.

வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடுவீடாகச் சென்று கணக்கெடுப்புப் படிவங்களை வழங்கி வருகின்றனர். மேலும் திரும்ப பெறப்பட்ட கணக்கெடுப்பு படிவங்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது.

இதுவரை விருதுநகர் மாவட்டத்தில் உள்ள 7 சட்டமன்ற தொகுதிகளில் மொத்தம் வழங்கப்பட்டுள்ள 16,10,778 வாக்காளர்களுக்கான கணக்கெடுப்புப் படிவங்களில் 13,37,911 படிவங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

தற்போது, வெளியூர்களில் பணிபுரிபவர்கள் தங்களுக்கான படிவங்களைப் பெற்றுக் கொள்வதை எளிதாக்குவதற்காகவும், 2002ம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் தங்களது பெயர்களைக் கண்டறிவதற்கு உதவி செய்வதற்காகவும், படிவங்களை நிரப்புவதற்கும், நிரப்பப்பட்ட படிவங்களை வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் திரும்ப அளிப்பதற்காகவும், அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் 28.11.2025 வெள்ளிக்கிழமை முதல் 1.12.2025 ஞாயிற்றுக் கிழமை ஆகிய 3 தினங்களிலும் சிறப்பு முகாம்கள் ஏற்பாடு செய்து நடத்தப்பட்டு வருகிறது.

எனவே, இதுவரை கணக்கெடுப்புப் படிவங்களைப் பெறாதவர்களும், தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கணக்கெடுப்புப் படிவங்களைப் பூர்த்தி செய்து அளிக்காதவர்களும் இச்சிறப்பு முகாம்களைப் பயன்படுத்தி படிவங்களை பெற்று பூர்த்தி செய்து திரும்பக் கொடுத்து உங்களது பெயர் வரைவு வாக்காளர் பட்டியல் 2026 இல் இடம் பெறுவதை உறுதி செய்யும்படி மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட கலெக்டர் என்.ஓ.சுகபுத்ரா, தெரிவித்துள்ளார்.



இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் டெல்லி மேலிட பார்வையாளர் தேனி மாவட்ட காங்கிரஸ் கட்சி தலைவரை தேர்வு செய்ய வருகைதந்த அகமதுல்லா ஹூசைனி அவர்களுக்கு பெரியகுளம் சட்டமன்றத் தொகுதியில் நடைபெற்ற கூட்டத்தில் தேனி மாவட்ட காங்கிரஸ் தலைவர் பணி வேட்பாளர் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் மாநில சிறப்பு பேச்சாளரும் கிராம மறுசீரமைப்பு கமிட்டியின் முதன்மை பயிற்சியாளருமான கம்பம் முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் ஆர்.சி சிவமணி சால்வை அணிவித்து வரவேற்றார். உடன் முக்கிய நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# ஆத்தூர் தொகுதியில் நடக்கும் சதி அமைச்சர் ஐ.பெரியசாமி குற்றச்சாட்டு



திண்டுக்கல் டிச2

ஆத்தூர் சட்டசபை தொகுதிக்குட்பட்ட சின்னாளப்பட்டி பேரூராட்சியில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத் தப் பணி நடக்கிறது. இதில், பெயர் வி வரங்கள் சரிபார்க்கும் பணியில் ஆயிரக்கணக்கான வாக்காளர்கள் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளது. இதன் பின்னியில் மாவட்ட கலெக்டரும். தாசில்தாரும் இருக்கிறார்கள் என அமைச்சர் ஐ.பெரியசாமி குற்ற சாட்டி இருக்கிறார்.

திண்டுக்கலில் உள்ள கலைஞர்மாளிகையில ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி செய்தியாளர்களை சந்தித்து பேசும்போது.....ஆத்தூர் சட்டசபை தொகுதிக்குட்பட்ட சின்னாள ப்பட்டி பேரூராட்சியில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்த ப்பணி நடக்கிறது. இதில், பெயர் விவரங் கள் சரிபார்க்கும் பணி யில் ஆயிரக்கணக்கான வாக்காளர்கள் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளது. 26 வாக்குச்சாவடிகளில் 7 ஆயிரத்து 227 வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர். இதன் பின்னணியில் தாசில்தார் முத்துமு ருகன், கலெக்டரும் (சரவணன்) உள்ளனர்.

அசின்னாளபட்டியில் மொத்தம் 25 ஆயிரம் வாக்காளர்கள் உள்ள னர். அவர்களில் 7 ஆயிரத்து 227 பேரின் பெயர்கள் எஸ்.ஐ. ஆரில் இடம் பெயர்ந்துவி ட்டதாக குறித்துள்ளனர். இதனால் அவர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் காலையில் இருந்து தாசில்தார் முத்துமுருகன் ஒவ் வொரு ஓட்டுச்சாவ டிக்கும் சென்று பணி யில் இருந்த பி.எல்.ஓ., க்களை வற்புறுத்தி இனி எஸ்.ஐ.ஆர். படிவம் நிரப்பி கொ ண்டு வருபவர்களை இடம் மாறுதல் எனக்குறிப்பிடுங்கள் எனக் கட்டாயப்படுத்தி எஸ்.ஐ.ஆர்., பணியை விரைந்து முடிக்க அழுத்தம் தந்துள்ளார். இதேபோல, ஆத்தூர் தொகுதியில் மட்டும் மொத்தம் 21 ஆயிரத்து 800 பேரின் ஓட்டுகள் இடம் மாறுதல் எனக்குறிக்கப்பட்டு ஓட்டுரிமை பறிக்கப்பட்டுள்ளது. 2016ல் ஆண்டுத் தேர்தலில் சின்னாளபட்டியில் 17 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஓட்டுகள் பதிவான நிலையில் தற்போது எஸ்.ஐ.ஆரில், இதுவரை 16 ஆயிரத்து 800 வாக்காளர்கள் மட்டுமே சேர்க்கப்பட்டு ள்ள தாக தகவல் உள்ளது. ஓட்டுப் பட்டியில் 60 வாக்காளர்கள் நீக்க ப்பட்டுள்ளனர். சின்னாளபட்டியில் வசிப்பவர்கள் வியாபாரிகள், அவர்கள் பகல் நேரத்தில் தொழில்ரீதியாக வெளியூருக்கு சென் று இரவில்தான் வீடு திரும்புவார்கள். எனவே, எஸ்.ஐ.ஆர்., பணியை கடைசி நாள் வரை பொறுமையாக செய்திருக்க வேண் டும்.

ஆனால், அவசர, அவசரமாக பணிகள் நிறுத்தப்பட்டதால், நேற்று படிவம் நிரப் பிக்கொண்டு வந்த பலரும் வாக்காளர் பட்டியலில் சேர முடியாமல் ஏமாற்றம் அடைந்தனர். வாக் கா ளர் பட்டியலில் பெரிய தவறு நடந்துள் ளது. ஆத்துர் தொகு தியில் கலெக்டர், தாசி ல்தார் துண்டுதல் பேரில் சதி நடந்துள் ளது.

தேர்தல் ஆணை யம் உடனடியாக தலை யிட்டு நடவடிக்கை எடு க்க வேண்டும். இதில் மத்திய அரசு எதும் சதி செய்ய சொல்லி இருக்கிறதா என்றும் தெரியவில்லை ஆத் துர் தொகுதியில் சிறப்பு முகாம்கள் நடத்த வேண்டும் என்று கூறினார்.

தினகனி
NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253
2.12.2025

# வெனிசுலாவில் எந்த விமானமும் பறக்கக் கூடாது: அமெரிக்க அதிபர் டிரம்ப் எச்சரிக்கை

அமெரிக்கா, டிச.2

அமெரிக்காவுக்கும், வெனிசுலாவுக்கும் இடையே நீண்ட காலமாக பகை இருந்து வருகிறது. அமெரிக்காவில் போதைப்பொருள் அதிகளவு புழங்குவதற்கு வெனிசுலா தான் காரணம் என்று டிரம்ப் குற்றச்சாட்டி வரும் நிலையில், கரீபியன் கடற்பகுதியில் போர்க்கப்பல்கள், போர் விமானங்களை அமெரிக்கா குவித்து வருகிறது.இந்த நிலையில் ராணுவ நடவடிக்கைகள் காரணமாக வெனிசுலா வான்வெளியில் பறக்கும் போது எச்சரிக்கை யாக இருக்குமாறு அமெரிக்க பெடரல் விமான நிர்வாகம் தெரிவித்தது. இதனால் உலக அளவில் பெரும்பாலான விமான நிறுவனங்கள் வெனிசுலாவுக்கான விமானங்களை ரத்து செய்துள்ளன.ஸ்பெயின், போர்ச்சுகல், சிலி, கொலம்பியா, பிரேசில், டிரினிடாட் டொபாகோ ஆகிய நாடுகளை சேர்ந்த சில விமான நிறுவனங்கள் வெனிசுலாவுக்கான விமான சேவைகளை ரத்து செய்தன.

இந்நிலையில், வெனிசுலாவின் வான்வெளி மூடப்படுவதாக அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், வான்வெளி மற்றும் அதை சுற்றியுள்ள வான்வெளி மூடப்படுகிறது. இதனை அனைத்து விமான நிறுவனங்கள், விமானிகள், போதைப்பொருள் விற்பனையாளர்கள் மற்றும்

கடத்தல்காரர்கள் கவனத்தில் கொள்ளவும்" என்று சரிகை விடுத்துள்ளார். டிரம்பின் இந்த மிரட்டலுக்கு கண்டனம் தெரிவித்த வெனிசுலா, இது ஒரு 'காலனித்துவ அச்சுறுத்தல்' என்று தெரிவித்துள்ளது.

# தனிமை சிறையில் இம்ரான்கானை அடைத்து சித்ரவதை: பாகிஸ்தான் எம்.பி. குற்றச்சாட்டு

பாகிஸ்தான், டிச.2

பாகிஸ்தான் முன்னாள் பிரதமரும், தெக்ரிக்இஇன்சாப் கட்சி தலைவருமான இம்ரான் கானுக்கு ஊழல் வழக்கில் தண்டனை விதிக்கப்பட்டு ராவல்பிண்டியில் உள்ள அடியாலா சிறையில் அடைக்கப்பட்டு உள்ளார்.

அவரை சந்திக்க குடும்பத்தினருக்கு சில மாதங்களாக அனுமதி மறுக்கப்பட்டது. இதற்கிடையே சிறையில் இம்ரான்கான் கொல்லப்பட்டதாக தகவல் பரவியது. இதையடுத்து அவரது கட்சியினர் போராட்டம் நடத்தினர்.

ஆனால் சிறையில் இம்ரான்கான் நல்ல உடல்நலத்துடன் இருப்பதாக சிறைத்துறை நிர்வாகம் தெரிவித்தது.

இந்த நிலையில் இம்ரான் கானின் தெக்ரிக்இஇன்சாப் கட்சி எம்.பியான குர்ராம் ஜீஷன் கூறியதாவது:பாகிஸ்தான் ஆட்சியாளர்கள் இம்ரான்கானின் புகழைக் கண்டு பயப்படுகிறார்கள். இதனால்த

அரான் அவரது படங்கள் அல்லது வீடியோக்களை வெளியிட அனுமதிக்கவில்லை. அவர் தனிமை சிறையில் அடைக்கப்பட்டு ஒரு மாதமாகிவிட்டது. அவரை சந்திக்க குடும்பத்தினர், வழக்கறிஞர்கள் மற்றும் கட்சியின் மூத்த தலைவர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

கடந்த சில நாட்களில் எங்களுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. இம்ரான்கான் உயிருடன் இருக்கிறார். தற்போது அடியாலா சிறையில் அடைக்கப்பட்டு உள்ளார்.

அவர் நலமாக இருக்கிறார் என்று தெரிவித்து உள்ளனர். பாகிஸ்தான் அரசாங்கம் இம்ரான்கானுடன் ஒரு ஒப்பந்தம் செய்ய முயற்சிக்கிறார்கள்.

அவரை நாட்டை விட்டு வெளியேறச் சொல்கிறார்கள். அவர் வெளிநாடு சென்று அவர் விரும்பும் இடத்தில் அமைதியாக இருந்தால் அவருக்கு சலுகைகள் கூட வழங்குவதாக அவர்கள் உறுதியளிக்கிறார்கள்.

ஆனால் அதை இம்ரான் கான் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டார். சிறையில் அடைக்கப்பட்ட போதிலும் இம்ரான்கானின் செல்வாக்கு தொடர்ந்து வளர்ந்து வருகிறது.

# 'விஜய்யின் அரசியல் வருகையை முதன்முதலில் வரவேற்றது வி.சி.க.தான்' திருமாவளவன்

வேலூரில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் செய்தியாளர்களை சந்தித்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது; "விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கு எந்த அச்சமும் இல்லை. விஜய்யின் அரசியல் வருகையை முதன்முதலில் வரவேற்று, வாழ்த்தியது வி.சி.க.தான். அவர் கட்சி தொடங்கி இரண்டரை ஆண்டுகள் ஆகின்றன. பல நிகழ்ச்சிகளையும் நடத்தியிருக்கிறார். ஆனால் அவர் இதுவரை கொள்கை சார்ந்த அரசியலை பேசாமல், வெறுப்பு அரசியலை மட்டுமே உயர்த்திப் பிடிக்கிறார். உடனடியாக ஆட்சியில் அமர்ந்து விட வேண்டும் என்ற வேட்கையோடு, ஆளுங்கட்சியை விமர்சிப்பது என்பதையும் தாண்டி வெறுப்பை உமிழ்ந்து கொண்டிருக்கிறார். அதனால்தான் ஜனநாயக சக்திகள் பலரும் அவருக்கு அறிவுரை சொல்லக்கூடிய வகையிலும், வழிகாட்டும் வகையிலும் கருத்துகளை சொல்லி வருகிறார்கள். வி.சி.க. இதுவரை தனிநபர் விமர்சனம் செய்ததில்லை. த.வெ.க.வை கடுமையாக நாங்கள் விமர்சித்ததும் இல்லை. ஆனால் அவர்கள்முன்வைக்கும்அரசியலில்எங்களுக்குவிமர்சனம் இருக்கிறது. அவர்கள் முன்வைக்கும் அரசியல் கொள்கை சார்ந்த அரசியலாக இல்லாமல், ஆளுங்கட்சி மீது வெறுப்பைஉமிழக்கூடியஅரசியலாகமட்டுமேஇருக்கிறது என்பதை மட்டும்தான் நாங்கள் சுட்டிக்காட்டியுள்ளோம்." இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# தொடர் சாலை விபத்துகளுக்கான காரணிகளை அறிந்து தீர்வு காண வேண்டும் நயினார் நாகேந்திரன்

சிவகங்கை மாவட்டம் கும்பங்குடி பாலம் அருகே அரசுப் பேருந்துகள் நேருக்கு நேர் மோதி பயங்கர விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 11 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். இந்த நிலையில் இந்த விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் இரங்கல் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் இரண்டு அரசுப் பேருந்துகள் மோதிக்கொண்ட விபத்தில் 11 பேர் உயிரிழந்ததாகவும், குழந்தைகள் பெண்கள் உட்பட 40க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளதாகவும் வரும் செய்திகள் மிகுந்த மன வேதனையளிக்கின்றன. தென்காசியில் நடந்த உயிரிழப்புகளின் ரணம் ஆறும் முன்பே, மீண்டுமொரு பெரும் விபத்து நடந்துள்ளது அதிர்ச்சியளிக்கிறது.

உயிரிழந்தோரின் குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கல்களையும் அனுதாபங்களையும் கனத்த இதயத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள காயமடைந்தவர்கள் முழு குணமடைந்து விரைவில் வீடு திரும்ப வேண்டுமென இறைவனிடம் வேண்டிக்கொள்கிறேன்.இத்தொடர்சாலைவிபத்துகளைத் தடுக்கும் வகையில் முறையான விழிப்புணர்வு ஏற்படுத்துவதோடு, இதற்கான காரணிகளை அறிந்து, அவற்றிற்கு உடனடியாகத் தீர்வு காண வேண்டுமெனவும் திமுக அரசைக் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# வேப்பனஹள்ளி முதல் அரியனப்பள்ளி வரை ஆந்திர மாநில எல்லை வரை தார்சாலை அமைக்கும் பணிகள்: அமைச்சர் துவக்கி வைத்தார்

கிருஷ்ணகிரி, டிச.2

கிருஷ்ணகிரி மாவட்டம், வேப்பனஹள்ளி ஊராட்சி ஒன்றியம், வேப்பனஹள்ளி குப்பம் சாலையில் நெடுஞ்சாலைத்துறை, நபார்டு மற்றும் கிராமபுற சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ், ரூ.1 கோடியே 72 இலட்சம் மதிப்பில் தார்சாலை பணிகளுக்கு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, மாவட்ட கலெக்டர் ச.தினேஷ் குமார் ஓசுர் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ் ஆகியோர் முன்னிலையில் புமி புஜை செய்து, பணிகளை துவக்கி வைத்தார்.




அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்ததாவது:

வேப்பனஹள்ளி முதல் அரியனப்பள்ளி சாலை 0/0 1/735 கி.மீ தூரத்திற்கு, மூலதன முதலீட்டிற்கான மாநிலங்களுக்கு வழங்கப்படும் சிறப்பு உதவித் திட்டம் 2025 - 2026 கீழ், ரூ.1 கோடியே 72 இலட்சம் மதிப்பில், ஊராட்சி ஒன்றிய சாலையை இதர மாவட்ட சாலையாக தரம் உயர்த்தி மேம்பாடு செய்வதற்கான பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், சாலை பணிகளை தரமாகவும், விரைவாகவும் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வழங்க நெடுஞ்சாலை துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்தார்.

# வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் தரவுகள் செயலில் பதிவேற்றம் செய்யும் பணிகள்: கலெக்டர் ஆய்வு

தருமபுரி, டிச.2

தருமபுரி மாவட்டம், 61அரூர் (தனி) சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அரூர் வாட்டாட்சியர் அலுவலகத்தில், வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் 2026 வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தம் (), இறப்பு, இருமுறை பதிவு, நிரந்தர இடம் பெயர்வு ஆகிய தரவுகள் செயலில் பதிவேற்றம் செய்யும் பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட கலெக்டர் ரெ.சதீஸ் நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் ஆணைப்படி, தருமபுரி மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் 2026 நடைபெற்று வருகிறது.

அதன் ஒரு பகுதியாக 04.11.2025 முதல் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிக்கான கணக்கெடுப்பு படிவம் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலம் வீடு வீடாக வாக்காளர்களுக்கு படிவங்கள் வழங்கப்பட்டு வருகிறது. வாக்காளர்கள் படிவத்தை பூர்த்தி செய்து மீண்டும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களிடம் அளிக்க வேண்டும். அவ்வாறு பெறப்படும் படிவங்கள் அனைத்தும் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம்பெறும். கணக்கெடுப்பு படிவம் மீண்டும் அளிக்காத வாக்காளர் பெயர் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம் பெறாது. பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை வட்டாட்சியர், கிராம நிருவாக அலுவலர், வருவாய் ஆய்வாளர் அலுவலகங்களிலும் அளிக்கலாம். மேலும், சந்தேகங்களுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டுப்பாட்டு அறை எண் 1950, வாட்ஸஅப் தேர்தல் உதவி எண் 9444123456, தருமபுரி வாக்காளர் பதிவு அலுவலர் எண் 04342260927, பாலக்கோடு வாக்காளர் பதிவு அலுவலர் எண் 04348 222045, பென்னாகரம் வாக்காளர் பதிவு அலுவலர் எண் 04342 255636, பாப்பிரெட்டிப்பட்டி வாக்காளர் பதிவு அலுவலர் எண் 04346246544, அரூர் வாக்காளர் பதிவு அலுவலர் எண் 04346296565 ஆகிய தொலைபேசி எண்களில் உதவி மையங்களை தொடபு கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இவ்வாறு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட கலெக்டர் ரெ.சதீஸ் தெரிவித்தார்.

# 'சரியான நடிகையைத் தேடி வருகிறோம்' 'எல்லம்மா' பட தயாரிப்பாளர்




எல்லம்மா படத்தின் கதாநாயகி இன்னும் இறுதி செய்யப்படவில்லை என்பதை தில் ராஜு உறுதிப்படுத்தி இருக்கிறார். பாலகம் பட புகழ் வேணு யெல்டாண்டி இயக்க உள்ள இந்தப் படம் எந்த அப்டேட்டும் இல்லாமல் இருந்து வருகிறது.

ஆரம்பத்தில், நடிகர்நிதின்இந்தபடத்தில்கதாநாயகனாகநடிக்கஇருந்தார். ஆனால் பின்னர் சில காரணங்களால் அவர் விலகினார். இதனால் படத்தின் நகர்வு மேலும் மந்தமாகியது.

இந்நிலையில், கதாநாயகன் முடிவடையவுள்ளதாகவும், சரியான நடிகையை தேடி வருவதாகவும் தில் ராஜு தெரிவித்தார். கதாநாயகி யார் என்பது உறுதி செய்யப்பட்டவுடன், அடுத்த ஆண்டு தொடக்கத்தில் திட்டமிட்டபடி படப்பிடிப்பு தொடங்கும் என்றும் அவர் கூறினார். இதனால் ரசிகர்கள் உற்சாகமடைந்துள்ளனர்

# ரூ.1,000 கோடி நஷ்டம் அடைந்தத படம்...இப்போது ஓடிடியில் எதில் பார்க்கலாம்?




இப்படம் அக்டோபர் 10ம் தேதி அன்று தமிழ் , தெலுங்கு , ஆங்கிலம் மற்றும் இந்தி ஆகிய மொழிகளில் வெளியானது.

''டிரான்'' படத்தின் நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட மூன்றாவது பாகமான டிரான்: ஏரிஸ் மிகப்பெரிய பாக்ஸ் ஆபீஸ் தோல்வியை சந்தித்தது.

ஜோச்சிம் ரோனிங் இயக்கிய இந்த படத்தில் ஜாரெட் லெட்டோ, ஜெப் பிரிட்ஜஸ், இவான் பீட்டர்ஸ், கிரேட்டா லீ, கேமரூன் மோனகன், சாரா டெஸ்ஜார்டின்ஸ், கில்லியன் ஆண்டர்சன், ஜேசன் டிரெம்ப்ளே, ஜோடி டர்னர்ஸ்மித் உள்ளிட்டோர் நடித்துள்ளனர்.

இப்படம் அக்டோபர் 10ம் தேதி அன்று தமிழ் , தெலுங்கு , ஆங்கிலம் மற்றும் இந்தி ஆகிய மொழிகளில் வெளியானது. மிகப்பெரிய எதிர்பார்ப்புகளுக்கு மத்திஒயில் வெளியான இப்படம் ரூ.1000 கோடி நஷ்டம் அடைந்ததாக கூறப்படுகிறது.

வேறு எந்த டிஸ்னி படத்தையும் விட மோசமாக தோல்வியை இப்படம் அடைந்திருக்கிறது. இந்நிலையில், திரையரங்குகளில் தோல்வியடைந்த இப்படம் தற்போது ஓடிடிக்கு வர உள்ளது. அதன்படி, இப்படம் நாளை முதல் அமேசான் பிரைம் வீடியோவில் வெளியாக உள்ளதாக தெரிகிறது.

# ஸ்ரேயாஸ் ஐயருடன் டேட்டிங் சென்றேனா..? வதந்திகளுக்கு மிருணாள் தாக்கூர் பதிலடி



இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர வீரர் ஸ்ரேயாஸ் ஐயர். இந்திய ஒருநாள் கிரிக்கெட் அணியின்துணை கேப்டனாகவும் இருந்து வருகிறார். கடந்த ஆஸ்திரேலிய தொடரில் ஏற்பட்ட காயத்திலிருந்து குணமடைந்துவரும்அவர்தற்போதுஓய்வில் உள்ளார்.

மறுபுறம் துல்கர் சல்மான் நடிப்பில் வெளிவந்த சீதா ராமம் படத்தில் கதாநாயகியாக நடித்து ஒட்டுமொத்த தென்னிந்திய சினிமா ரசிகர்களின் மனதிலும் இடம்பிடித்தவர் நடிகை மிருணாள் தாக்கூர். சின்னத்திரையில் இருந்து வெள்ளித்திரைக்கு வந்தவர்களில் இவரும் ஒருவர்.

பாலிவுட் திரையுலகில் நடித்து வந்த மிருணாள் தாகூருக்கு சீதா ராமம் படம் நல்ல பிரபலத்தை தென்னிந்திய சினிமாவில் ஏற்படுத்தி கொடுத்தது.

இந்த சூழலில் ஸ்ரேயாஸ் ஐயரும் மிருணாள் தாக்கூரும் ரகசியமாக டேட்டிங் செய்ததாக தகவல்கள் வெளியாகி உள்ளன. சமீபகாலமாக இவர்கள் காதலிக்க தொடங்கியுள்ளதாகவும் நண்பர்களின் பார்ட்டிகளில் மிருணாள் தாக்கூரும், ஸ்ரேயாஸ் ஐயரும் நேரில் சந்தித்து தங்கள் காதலை வளர்த்து வருவதாகவும் தகவல்கள் தெரிவித்தன.

இந்நிலையில் இந்த தவறான தகவல்களுக்கு பதிலடி கொடுக்கும் விதமாக மிருணாள் தாக்கூர் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அதில், "அவர்கள் பேசட்டும், நாம் சிரிப்போம். பின்குறிப்பு.: வதந்திகள் இலவச விளம்பரம்... எனக்கு இலவசம் என்றால் ரொம்ப பிடிக்கும்!" என்று பதிவிட்டுள்ளார்.

# உலகக்கோப்பை கூடைப்பந்து தகுதி சுற்று: இந்திய அணி தோல்வி



20வது உலகக்கோப்பை கூடைப்பந்து போட்டி 2027ம் ஆண்டு கத்தாரில் நடக்கிறது. இதையொட்டி தற்போது தகுதி சுற்று நடந்து வருகிறது. இதில் ஆசிய ஓசியானா மண்டலத்திற்கானதகுதிசுற்றின்ஒருஆட்டத்தில்இந்தியஅணி(டிபிரிவு)சவுதிஅரேபியாவை எதிர்கொண்டது.

சென்னை நேரு ஸ்டேடியத்தில் நேற்றிரவு நடந்த இந்த ஆட்டத்தில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய சவுதி அரேபியா 81-57 என்ற புள்ளி கணக்கில் இந்தியாவை வீழ்த்தியது.

இந்திய அணி அடுத்து பிப்ரவரி 27ந்தேதி கத்தாரை சந்திக்கிறது.

# வெற்றியை கேக் வெட்டி கொண்டாடிய வீரர்கள்.. புறக்கணித்த விராட்.. இந்திய அணிக்குள் விரிசலா..?

இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென் ஆப்பிரிக்க கிரிக்கெட் அணி டெஸ்ட் தொடரை 20 என்ற கணக்கில் கைப்பற்றியது. அடுத்ததாக 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் ஆடுகிறது.

இதன்படி இந்தியா தென் ஆப்பிரிக்கா இடையிலான முதலாவது ஒரு நாள் போட்டி ஜார்கண்ட் மாநிலம் ராஞ்சியில் நேற்று அரங்கேறியது. இதில் டாஸ் ஜெயித்த தென் ஆப்பிரிக்க கேப்டன் மார்க்ரம் பந்து வீச்சை தேர்வு செய்தார். அதன்படி முதலில் பேட்டிங் செய்த இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 349 ரன்கள் குவித்தது. அதிகபட்சமாக விராட் கோலி 135 ரன்களும், கே.எல்.ராகுல் 60 ரன்களும், ரோகித் 57 ரன்களும் அடித்தனர். தென் ஆப்பிரிக்கா தரப்பில் மார்கோ ஜான்சன், பர்கர், கார்பின் போஷ் மற்றும் ஓட்னீல் பார்ட்மேன் தலா 2 விக்கெட்டுகள் வீழ்த்தினர்.

அடுத்து 350 ரன் இலக்கை நோக்கி ஆடிய தென் ஆப்பிரிக்க அணி 49.2 ஓவர்களில் 332 ரன்களுக்கு ஆல்அவுட் ஆனது. இதனால் இந்தியா 17 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. அந்த அணியில் அதிகபட்சமாக மேத்யூ பிரீட்ஸ்கே 72 ரன்களும், மார்கோ ஜான்சன் 70 ரன்களும், கார்பின் போஷ் 67 ரன்களும் அடித்தனர். இந்தியா தரப்பில் குல்தீப் யாதவ் 4 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் இந்தியா 10 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது. விராட் கோலி ஆட்ட நாயகன் விருதை பெற்றார்.

இந்நிலையில் இந்த வெற்றியை இந்திய அணியினர் ஓட்டலில் கேக் வெட்டி கொண்டாடினர். இந்திய கேப்டன் கே.எல். ராகுல் கேக்கினை வெட்டினார். அப்படி கொண்டாட்டங்கள் நடந்து கொண்டிருந்தபோது ஆட்ட நாயகன் விராட் கோலி அந்த அறைக்குள் நுழைந்தார்.


கே.எல். ராகுல் கேக் வெட்டும்போது நடந்து வந்த விராட் கோலி வெறும் கை தட்டிவிட்டு அங்கு நிற்காமல் சென்றார். இதனால் விராட் கோலி அணியின் வெற்றி கொண்டட்டத்தை புறக்கணித்ததாக சமூக வலை தளங்களில் பரவியது. அத்துடன் இந்த வீடியோ வைரலானது.

அதேபோல் கொண்டாட்டம் நடந்து கொண்டிருந்த வேளையில் இந்திய அணியின் தலைமை பயிற்சியாளரான கவுதம் கம்பீர் முன்னணி வீரரான ரோகித் சர்மாவுடன் தீவிரமாக பேசி கொண்டிருந்தார். இதனால் இந்திய அணிக்குள் விரிசல் எழுந்துள்ளதாக செய்திகள் வெளியாகின.

இதுதவிர, சமூகஊடகங்களில்பரவிவரும்மற்றொருவீடியோவில், விராட் கோலிடிரஸ்ஸிங்ரூமுக்குள்நுழையும்போது அங்கிருந்த கம்பீரை கண்டும் காணாமலும் செல்வதுபோன்ற காட்சிகள் இடம்பெற்றுள்ளன. இதனால் இந்திய அணிக்குள் விரிசல் ஏற்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாக தொடங்கி உள்ளன.

முன்னதாக இந்திய பயிற்சியாளர் மற்றும் மூத்த வீரர்களுக்கு இடையே பிரச்சினைகள் உள்ளதாக பேசப்படும் நிலையில் இந்த வீடியோக்கள் வெளியாகியுள்ளன. இது பலரது மத்தியில் பேசு பொருளாகி உள்ளது.

# அஸ்லான் ஷா கோப்பை ஆக்கி: இறுதிப்போட்டியில் இந்திய அணி தோல்வி



6அணிகள்இடையிலானசுல்தான்அஸ்லான் ஷா கோப்பை ஆக்கி போட்டி மலேசியாவின் இபோ நகரில் நடைபெற்றது. இதன் லீக் சுற்று முடிவில் பெல்ஜியம் (4 வெற்றி, ஒரு டிரா) 13 புள்ளிகளுடன் முதலிடமும், இந்தியா (4 வெற்றி, ஒரு தோல்வி) 12 புள்ளிகளுடன் 2வது இடமும் பிடித்து இறுதிப்போட்டிக்கு முன்னேறின. நியூசிலாந்து (7 புள்ளி), மலேசியா (4 புள்ளி), கனடா (4 புள்ளி), தென்கொரியா (3 புள்ளி) அணிகள் இறுதிப்போட்டி வாய்ப்பை இழந்தன.

இந்நிலையில் இந்த தொடரின் சாம்பியன் யார்? என்பதை நிர்ணயிக்கும் இறுதிப்போட்டியில் இந்தியாபெல்ஜியம் அணிகள் மோதின.

சம பலம் வாய்ந்த இரு அணிகள் மல்லுக்கட்டியதால் ஆட்டத்தில் அனல் பறந்தது.

ஆட்டத்தின் 34வது நிமிடத்தில் பெல்ஜியம் அணி கோல் அடித்து முன்னிலை பெற்றது.

இந்திய அணி பதில் கோல் திருப்ப எடுத்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிந்தது.

இதனால் முழு நேர ஆட்ட முடிவில் இந்திய அணி 01 என்ற கணக்கில் தோல்வியை தழுவியது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, Kil-paukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.